**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1321/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகையா | த–பெ | சின்னையா |
| ஊர்: | : | மனச்சை | | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர். | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.05.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் மனச்சையில் வசித்து சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் சகாயா புஷ்பராஜ் என்பவர் பணி ஓய்வு பெற்று விட்ட காரணத்தால் அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கினங்க, காலதாமதத்தை தவிற்கும் பொருட்டு எதிரி தரப்பில் ஆட்சேபனையின்றி நீதிமன்ற அனுமதியுடன் அவரது கையொப்பம் தெரிந்த நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

விசாரணை அதிகாரி நிலைய பணியில் இருந்த போது 13.08.2020 அன்று 16.00 மணிக்கு திருமயம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பட்ட தகவலை பெற்று நிலைய குற்ற எண். 55/2020 பிரிவுகள் 294(b), 323, 324 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் அ.சா.ஆ.2. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3**. பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் சம்பவயிடம்சென்று பட்டியல் சாட்சிகள் 6 மற்றும் 7 ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4, பார்வை மகஜர் அ.சா.ஆ.5**. வழக்கின் எதிரிகளை தேடி சென்ற நிலையில் 14.08.2020 அன்று காரைக்குடி தாலுகா சின்ன வடகுடிபட்டி பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்தவரை வழக்கின் காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் புதுக்கோட்டை அரசு மருத்துவமனை திரு.நடேசன் என்பவரை விசாரணை செய்து அவரிடம் இருந்து காய சான்றிதழ் பெற்று அவருக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் என சான்று அளித்துள்ளார். மேற்படி காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6. வழக்கின் தன்மைக்கேற்ப வழக்கின் சட்ட பிரிவினை மாற்றம் செய்து இதச 326 ஆக மாற்றம் செய்து சட்ட பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்துள்ளார். சட்ட பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.7. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரணை செய்து 06.11.2020 அன்ற மேற் சொன்ன பிரிவுகள் அடிப்படையில் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் புலன் விசாரணைஅதிகாரி புகார் தாரர் கொடுத்த புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் அ.சா.1 ஐ சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எதிரிகள் தாக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்டிவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.08 17:53:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.